நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**பயிர்க் காப்பீடு: நெல் விவசாயிகளிடம் முழு பிரீமியம் வாங்க மறுக்கும் கூட்டுறவு வங்கிகள்**

வி. தேவதாசன்

First Published : 10 Dec 2010 12:00:00 AM IST

சென்னை, டிச. 9: கனமழை, வெள்ளம் காரணமாக நெற்பயிர்கள் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், பயிர்க் காப்பீட்டுக்கான முழு பிரீமியத்தை வாங்க தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகள் மறுத்து வருகின்றன.

கடந்த இரு வாரங்களாக தமிழகம் முழுவதும் பெய்த கனமழையால், மாநிலம் முழுவதும் விவசாய சாகுபடி பாதிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக சம்பா மற்றும் தாளடி நெற்பயிர்கள் நீரில் மூழ்கி, கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன. இதனால் இந்த ஆண்டு நெல் விவசாயிகளுக்கு கடுமையான மகசூல் பாதிப்பு ஏற்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிலையில் மழையால் பாதிக்கப்பட்ட நெல் வயல்களுக்கு ஏக்கருக்கு 3,200 வீதம் நிவாரணம் வழங்கப்படும் என்று தமிழக அரசு அறிவித்துள்ளது.

நெல் உற்பத்திக்கான செலவு ஏக்கருக்கு 15 ஆயிரத்துக்கும் மேல் உயர்ந்து விட்ட நிலையில், தமிழக அரசின் நிவாரணம் விவசாயிகளைப் பாதுகாப்பதாக இருக்காது. எனவே, பயிர்க் காப்பீடு மட்டுமே விவசாயிகளின் நஷ்டத்தை ஓரளவு குறைக்க உதவும் என கருதப்படுகிறது.

இந்நிலையில், பயிர்க் காப்பீட்டுக்கான பிரீமியத்தை செலுத்துவதற்கான கடைசி நாள் இம்மாதம் 15-ம் தேதி என நிர்ணயிக்கப்பட்டுள்ளதால், இப்போது பிரிமியம் செலுத்துவதில் நெல் விவசாயிகள் தீவிரம் காட்டி வருகின்றனர். இதனால் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் பிரீமியம் செலுத்த வரும் விவசாயிகளின் கூட்டம் அலைமோதுகிறது.

இதற்கிடையே பயிர்க் காப்பீட்டுக்கான முழு பிரீமியத்தையும் வாங்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகள் மறுக்கின்றன என்று விவசாயிகள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

பயிர் காப்பீட்டுக்கான பிரீமியம் இரண்டு அளவுகளில் வசூலிக்கப்படுகிறது. குறைந்தபட்ச உத்தரவாத மகசூலுக்கான காப்பீடு என்ற வகையில் ஏக்கருக்கு 13 ஆயிரத்து 34 காப்பீட்டுத் தொகையாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதற்கான பிரீமியம் அரசின் மானியம் நீங்கலாக ஏக்கருக்கு 130 செலுத்த வேண்டும்.

குறைந்தபட்ச உத்தரவாத மகசூலுக்கும் மேல் அதிகபட்ச மகசூல் வாய்ப்புக்கான காப்பீடு என்ற வகையில் ஏக்கருக்கு 11 ஆயிரத்து 396 காப்பீட்டுத் தொகையாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஆக, ஒரு ஏக்கரில் கிடைக்க வாய்ப்புள்ள மொத்த மகசூல் என்ற அடிப்படையில் ஏக்கருக்கு 24

ஆயிரத்து 420 காப்பீட்டுத் தொகையாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதற்கான மொத்த பிரீமியமாக சிறு விவசாயிகள் ஏக்கருக்கு ரூ.574, பெரு விவசாயிகள் ரூ.637 செலுத்த வேண்டும்.

இந்நிலையில், விவசாயிகள் மொத்த மகசூல் வாய்ப்புக்கான பிரீமியத்தை செலுத்த தயாராக உள்ள போதிலும், பெரும்பாலான கூட்டுறவு வங்கிகளில் குறைந்தபட்ச உத்தரவாத மகசூலுக்கான பிரீமியத் தொகை மட்டுமே வசூல் செய்யப்படுகிறது. விவசாயிகள் தரும் கூடுதல் பிரீமியத்தை வாங்க கூட்டுறவு வங்கி ஊழியர்கள் மறுத்து வருவதாகக் கூறப்படுகிறது.

இது குறித்து காவிரி டெல்டா பாசனப் பகுதி விவசாயிகள் சங்க பொதுச் செயலாளர் மன்னார்குடி எஸ். ரங்கநாதன் கூறியதாவது:

மழையால் ஏற்பட்ட பயிர் பாதிப்புக்கு ஏற்ப ஒவ்வொரு பகுதி விவசாயிகளும் பயிர்க் காப்பீடு செய்ய விரும்புகின்றனர். உதாரணமாக நாகப்பட்டினம் மாவட்டம், திருப்பூண்டியைச் சுற்றியுள்ள பகுதிகளில் நெற்பயிர்கள் முற்றிலும் அழிந்து விட்டன. அந்தப் பகுதி விவசாயிகள் முழுக் காப்பீட்டுக்கான பிரீமியத்தை செலுத்தவே விரும்புவர். இதனை வங்கி ஊழியர்கள் மறுத்தால், அது சரியல்ல.

எனவே, உத்தரவாத மகசூலுக்கும் மேல் பிரீமியம் செலுத்த விரும்பும் விவசாயிகளிடம் வங்கிகள் மறுக்காமல் பிரீமியத்தை பெற்றுக் கொள்ள வேண்டும். இது குறித்து கூட்டுறவு வங்கிகளுக்கு தமிழக அரசு உடனடியாக அறிவுறுத்த வேண்டும்.

சாகுபடி பாதிப்பு அதிகமாக உள்ளதால், பிரீமியம் செலுத்துவதற்கான கடைசி தேதியை மேலும் சில நாள்கள் நீட்டிப்பது குறித்தும் தமிழக அரசு பரிசீலிக்க வேண்டும் என்றார் ரங்கநாதன்.

இது குறித்து இந்திய வேளாண்மை காப்பீட்டு நிறுவனத்தின் மண்டல மேலாளர் சி. அன்பரசு கூறியதாவது:

குறைந்தபட்ச உத்தரவாத மகசூலுக்கு காப்பீடு செய்வதா அல்லது அதிகபட்ச வாய்ப்புள்ள மகசூலுக்கு காப்பீடு செய்வதா என்பதை விவசாயிகள்தான் முடிவு செய்ய வேண்டும். எனவே, இந்த இரண்டு பிரீமிய அளவுகளில் விவசாயிகள் எதைத் தேர்வு செய்கிறார்களோ அதற்கேற்ப பிரீமியம் வசூல் செய்ய வேண்டும் என்று அனைத்து வங்கிகளுக்கும் ஏற்கெனவே தெளிவாக அறிவுறுத்தியுள்ளோம்.

குறைந்தபட்ச உத்தரவாத மகசூலுக்கான பிரீமியம் மட்டும் வசூலித்தால், விவசாயிகள் பாதிப்படைய நேரிடும். உதாரணமாக ஒரு குறிப்பிட்ட பகுதியில் 50 சதவீத மகசூல் இழப்பு ஏற்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்யப்பட்டால், அந்தப் பகுதியில் காப்பீடு செய்த விவசாயிகளுக்கு காப்பீட்டுத் தொகையில் 50 சதவீதம் வழங்கப்படும். அங்கு உத்தரவாத மகசூலுக்கு மட்டும் காப்பீடு செய்தவர்களுக்கு ஏக்கருக்கு சுமார் 6,500 மட்டுமே கிடைக்கும். அதிகபட்ச வாய்ப்புள்ள மகசூலுக்கு காப்பீடு செய்திருந்தால், அவர்களுக்கு ஏக்கருக்கு 12 ஆயிரத்துக்கும் மேல் கிடைக்கும்.

எனவே, விவசாயிகளுக்கு சென்று சேர வேண்டிய பலனைத் தடுக்காத வகையில், வங்கி ஊழியர்கள் பிரீமியம் வசூலிக்க வேண்டும்.

மேலும், உத்தரவாத மகசூலுக்கு மட்டும் காப்பீடு செய்துள்ளவர்கள், கடைசி தேதிக்குள் அதிகபட்ச மகசூல் காப்பீட்டுக்கான மீதி பிரீமியத்தை வங்கிகளில் செலுத்தலாம் என்றார் அன்பரசு.

**பயனில்லாத பயிர் காப்பீடு: விவசாய சங்கம் புகார்**

First Published : 10 Dec 2010 09:10:22 AM IST

சிதம்பரம், டிச.9: காட்டுமன்னார்கோவில் ஒன்றியத்துக்குட்பட்ட குமராட்சி ஒன்றியத்தில் பயிர் காப்பீடு திட்டத்தால் பயனில்லை என்று வீராணம் ஏரி பாசன விவசாய சங்கம் புகார் தெரிவித்துள்ளது.


÷இது குறித்து அச் சங்கச் செயலர் விநாயகமூர்த்தி கூறியது:

÷வீராணம் ஏரியிலிருந்து கூடுதலாக நீர் திறந்துவிடப்படுவதாலும், மணவாய்க்கால் மூலம் வரும் வெள்ளநீரால் காட்டுமன்னார்கோவில் அருகே உள்ள திருநாரையூர், சர்வராஜன்பேட்டை, சிறகிழந்தநல்லூர், நடுதிட்டு, எடையார், பிள்ளையார்தாங்கல் உள்ளிட்ட கிராமங்கள் தொடர்ந்து வெள்ளம் பாதிக்கும் கிராமங்களாக இருந்து வருகிறது. ÷இப்பகுதியில் பயிர்கள் முற்றிலுமாக பாதிக்கப்படும் கிராமங்களாகும். தற்போது காட்டுமன்னார்கோவில் தாலுக்காவில் ரூ. 2.60 கோடி பயிர் காப்பீடு வழங்கப்பட்டு வருகிறது. இதில் குமராட்சி ஒன்றியத்திக்குட்ப்பட்ட வெள்ளம் பாதித்த மேற்கண்ட கிராமங்களில் பயிர் காப்பீடு வெறும் 4 சதவீதமே வழங்கப்பட்டுள்ளது. ஏனென்றால் இவர்களது கிராமங்கள் உடையார்குடி வருவாய் கிராமங்களில் உள்ளதால் பயிர் காப்பீடு குறைத்து வழங்கப்பட்டுள்ளது. இதனால் எந்த பயனும் இல்லை என அப்பகுதி விவசாயிகள் விரக்தியில் உள்ளனர்.

÷குமராட்சி வருவாய் கிராமத்துக்குட்பட்ட பகுதி கிராமங்களில் 16 சதவீதம் பயிர் காப்பீடு வழங்கப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட கிராமங்களை உடையார்குடி வருவாய் கிராமங்களின் கட்டுப்பாட்டின்கீழ் உள்ளதை மாற்றி குமராட்சி வருவாய் கிராமங்களின் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வந்து பயிர் காப்பீடு 16 சதவீதம் வழங்க மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**உணவுப் பணவீக்கம் 8.69 சதவீதமாக உயர்வு**

First Published : 10 Dec 2010 12:00:00 AM IST




புது தில்லி, டிச.9: தொடர்ந்து 7 வாரங்களாக சரிவைச் சந்தித்து வந்த உணவுப் பணவீக்கம் நவம்பர் 27-ம் தேதியுடன் முடிவடைந்த வாரத்தில் 8.69 சதவீதமாக உயர்ந்தது. முந்தைய வாரத்தை விட கணிசமான இந்த உயர்வு பெருமளவு தாக்கத்தை ஏற்படுத்தாது என்று நிபுணர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

இருப்பினும் கச்சா எண்ணெய் விலை சர்வதேச சந்தையில் உயர்ந்து வருவதால் ஒட்டுமொத்த பணவீக்கம் அதிகரிக்கும் அபாயம் உருவாகியுள்ளது.

வெங்காயம், பழங்கள் மற்றும் பால் விலை உயர்வு காரணமாக உணவுப் பணவீக்கம் அதிகரித்ததாக நிபுணர்கள் தெரிவித்தனர். நவம்பர் 20-ம் தேதியுடன் முடிவடைந்த வாரத்தில் உணவுப் பணவீக்கம் 8.60 சதவீதமாக இருந்தது. கடந்த ஆண்டு மே மாதத்திலிருந்து மிகக் குறைந்த அளவுக்கு உணவுப் பணவீக்கம் சரிந்தது அதுவே முதல் முறை. கடந்த ஆண்டு இதே காலத்தில் உணவுப் பணவீக்கம் 20 சதவீதத்துக்கும் அதிகமாக இருந்தது.

உணவுப் பொருள்களின் விலை உயர்வைக் கட்டுப்படுத்த அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துவருவதோடு, தொடர்ந்து கண்காணித்து வருவதாக ஆலோசனைக் குழு கூட்டத்தில் மத்திய நிதி அமைச்சர் பிரணாப் முகர்ஜி தெரிவித்தார். நடப்பாண்டு குறுவை சாகுபடி அளவு 10 சதவீதம் அதிகமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் பணப் பயிர்களான பருத்தி, கரும்பு ஆகியவற்றின் விளைச்சல் 10 சதவீதம் கூடுதலாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இப்போது ஏற்பட்டுள்ள கணிசமான உயர்வு தொடர்ந்து நீடிக்கும் என்று கூற முடியாது. நடப்பு நிதி ஆண்டு இறுதிக்குள் (மார்ச்) பணவீக்க விகிதம் 5 சதவீதம் முதல் 6 சதவீத அளவுக்கு குறைந்துவிடும் என்று டியோலைட் இந்தியா நிறுவனத்தின் முதன்மை பொருளாதார நிபுணர் சந்தோ கோஷ் தெரிவித்தார்.

கச்சா எண்ணெய் விலை உயர்வு, ஐரோப்பிய நாடுகளில் நிலவும் கடும் குளிர் ஆகியவை காரணமாக ஒட்டுமொத்த பணவீக்க விகிதம் உணவுப் பணவீக்கத்தை விட அதிகரிக்கும் என்று தெரிகிறது.

சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலை பீப்பாய்க்கு 89 டாலர் அளவுக்கு உயர்ந்துள்ளது. இதனால் ஆசிய சந்தையில் கடுமையான தாக்கம் ஏற்பட்டுள்ளது. இந்தியாவில் நவம்பர் மாதத்தில் பெட்ரோலிய பொருள்களின் விலை உயர்த்தப்படாததால், அதன் தாக்கம் ஏதுமில்லை.

மகாராஷ்டிரத்தில் பருவம் தவறி பெய்த மழை காரணமாக வெங்காய விளைச்சல் பாதிக்கப்பட்டது. இதனால் வெங்காயத்தின் விலை உயர்ந்ததாக ஆக்ஸிஸ் வங்கியின் மூத்த துணைத் தலைவர் செப்கதா பட்டாச்சார்ய தெரிவித்தார்.

நடப்பு நிதி ஆண்டில் நவம்பர் மாதத்தில் பணவீக்கம் 7.5 சதவீத அளவுக்குக் குறையும் என்று தலைமை பொருளாதார ஆலோசகர் கெப்சிக் பாசு தெரிவித்தார்.

வெங்காயத்தின் விலை 25.8 சதவீதமும், பழங்களின் விலை 18.31 சதவீதமும், பால் விலை 17.76 சதவீதமும் உயர்ந்திருந்தது. இதேபோல முட்டை, இறைச்சி, மீன் ஆகியவற்றின் விலையும் கணிசமாக உயர்ந்திருந்தன. பருப்பு விலை 10 சதவீதம் குறைந்திருந்தது. கோதுமை விலை 3 சதவீதம் குறைந்திருந்தது.

## பாமாயில் இறக்குமதி விவகாரம்: விசாரணையை தொடரக் கோரி உச்ச நீதிமன்றத்தில் கேரளம் வழக்கு

First Published : 10 Dec 2010 02:29:04 AM IST

புது தில்லி, டிச.9: பாமாயில் இறக்குமதி விவகாரம் தொடர்பாக விசாரணையை தொடங்கக் கோரி உச்ச நீதிமன்றத்தில் கேரள மாநில அரசு வழக்கு தொடர்ந்துள்ளது.

பாமாயில் இறக்குமதி விவகாரம் தொடர்பான வழக்கு கேரள சிபிஐ நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது. இந்த வழக்கில் முன்னாள் முதல்வர் கே. கருணாகரன், மத்திய ஊழல் கண்காணிப்பு ஆணையர் பி.ஜே. தாமஸ் உள்ளிட்டோர் குற்றம் சாட்டப்பட்டுள்ளனர்.

இதை எதிர்த்து கருணாகரன் மனு செய்தார். சிபிஐ நீதிமன்றம் அதை தள்ளுபடி செய்யவே அவர் கேரள உயர் நீதிமன்றத்தில் மனு செய்தார். அங்கும் மனு தள்ளுபடியாகவே அவர் உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தார்.

மனுவை விசாரித்த உச்ச நீதிமன்றம் கடந்த 2007-ம் ஆண்டில் இந்த வழக்கு விசாரணைக்கு தடை விதித்துள்ளது.

உச்சநீதிமன்ற தடை காரணமாக பாமாயில் இறக்குமதி வழக்கை கேரளத்திலுள்ள சிபிஐ நீதிமன்றத்தால் விசாரிக்க முடியவில்லை. அவ்வப்போது நீதிமன்றம் கூடி வழக்கை ஒத்திவைத்து வருகிறது.

இந்த நிலையில் வழக்கு விசாரணையைத் தொடங்கக் கோரியும், தடையை நீக்கக் கோரியும் கேரள மாநில அரசு உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளது.

**"தடுப்பணைகளை எதிர்பார்க்கும் விவசாயிகள்'**

First Published : 10 Dec 2010 12:00:00 AM IST



தாமரைப்பாக்கம் தடுப்பணை வழியாக கடலுக்கு செல்லும் பூண்டி ஏரியில் இருந்து திறக்கப்பட்ட உபரிநீர்.

திருவள்ளூர், டிச. 9: திருவள்ளூர் மாவட்டத்தில் இருக்கும் குசஸ்தலை, ஆரணி, கூவம் ஆறுகளில் 5 கி.மீட்டர் தூரத்துக்கு ஒரு தடுப்பணை கட்ட வேண்டும் என மாவட்ட விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர்.

திருவள்ளூர் மாவட்டத்தில் ஆரணி ஆறு, குசஸ்தலை ஆறு, கூவம் ஆறு என 3 ஆறுகள் உள்ளன. இதில் ஆரணி ஆறு ஆந்திர மாநில எல்லையான ஊத்துக்கோட்டையில் இருந்து பொன்னேரி, புலிகாட் வழியாக கடலில் கலக்கிறது. குசஸ்தலை ஆறு ஆந்திர மாநில எல்லையான பள்ளிப்பட்டுப் பகுதியில் இருந்து வள்ளூர் அணைக்கட்டு வழியாக கடலில் கலக்கிறது. கூவம் ஆறு பேரம்பாக்கம் அடுத்த கேசவரம் அணைக்கட்டில் தொடங்கி பக்கிங்காம் கால்வாய் வழியாக துறைமுகம் அருகே கடலில் கலக்கின்றது.

இம்மாவட்டத்தில் செல்லும் 3 ஆறுகளும் சுமார் 60 முதல் 70 கி.மீட்டர் நீளம் கொண்ட ஆறுகளாகும். ஒவ்வொரு ஆற்றிலும் 5-க்கும் குறைவான தடுப்பணைகளே உள்ளன. தற்போது பெய்த வடகிழக்கு பருவ மழையால் 3 ஆறுகளிலும் நீர்பிடிப்பு உள்ளது.

பூண்டி ஏரி திறக்கப்பட்டதால் ஆரணி ஆற்றில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு ஆற்றில் உள்ள ஒரு சில தடுப்பணைகளை தாண்டி இறுதியாக உள்ள சமீபத்தில் கட்டப்பட்ட பாலேஸ்வரம் அணைக்கட்டு நிரம்பி உபரிநீர் கடலில் கலந்து வீணாகிறது.

அதே போல் கடந்த மாதம் ஆந்திர மாநிலம் பிச்சாட்டூர் அணைக்கட்டில் உடைப்புஏற்பட்டு குசஸ்தலை ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு தாமரைப்பாக்கம் தடுப்பணை நிரம்பி உபரிநீர் கடலில் சென்று கலக்கிறது. கூவம் ஆற்றில் வெறும் மழைநீர் மட்டுமே வந்ததால் அதில் நீர் பற்றாக்குறை உள்ளது.

இதுகுறித்து திருவள்ளூர் மாவட்ட பாரதிய ஜனதா கட்சியின் விவசாய அணியின் தலைவர் பாஸ்கரன் கூறியது: திருவள்ளூர் மாவட்டத்தைச் சுற்றியுள்ள ஆரணி, குசஸ்தலை, கூவம் ஆறுகளின் நீர் பிடிப்புப் பகுதிகளைச் சுற்றி ஆயிரக்கணக்கான விவசாய நிலங்கள் உள்ளன. மேற்கண்ட பயிர்களுக்கு நீர் பற்றாக்குறை ஏற்படாமல் தடுக்கும் விதமாக தமிழக அரசு 5 கி.மீ. தூரத்துக்கு ஒரு தடுப்பணை என மூன்று ஆறுகளிலும் கட்டினால் இம்மாவட்டத்தில் விவசாயம் செழிப்பாக இருக்கும். அதே போல் மாவட்டம் முழுவதும் உள்ள ஏரிகளையும் தூர்வாரி முறையாக பராமரித்தால் தண்ணீர் தட்டுப்பாடே இல்லாத நிலை ஏற்படும்.

எனவே தமிழக அரசு பரிசீலனை செய்து மாவட்டத்தில் உள்ள ஆரணி, குசஸ்தலை, கூவம் ஆறுகளில் 5 கி.மீ. தூரத்துக்கு ஒரு தடுப்பணை என 3 ஆறுகளில் கட்ட உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

**மழையில் அடித்து செல்லப்பட்ட நிலக்கடலை விதைகள்**

First Published : 10 Dec 2010 09:24:08 AM IST

திருத்தணி, டிச. 9: விவசாய நிலங்களில் நிலக்கடலை விதைத்த விவசாயிகள், கடந்த சில தினங்களாக பெய்து வரும் கனமழைக்கு விதைகள் அடித்து செல்லப்பட்டதால், கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

÷தமிழகம் முழுவதும் கடந்த சில தினங்களாக பரவலாக கனமழை பெய்தது. மேலும் தொடர்ச்சியாக மழை பெய்து வந்தது.

÷இதனால் அறுவடைப் பருவத்தில் உள்ள நெற்பயிர்கள் தண்ணீரில் மூழ்கி அழுகும் நிலையில் உள்ளது. வெட்டுப் பருவத்தில் உள்ள கரும்பு பயிரிடப்பட்டுள்ள நிலங்களில் மழைநீர் தேங்கியுள்ளதால் கரும்புகளை வெட்டி ஆலைகளுக்கு அனுப்ப முடியாமல் விவசாயிகள் வேதனையில் உள்ளனர்.

÷இதனால் குறிப்பிட்ட காலத்துக்குள் நெற்பயிர்களை அறுவடை செய்தும், கரும்புகளை வெட்டி ஆலைகளுக்கு அனுப்பி பணம் பெற்று பயனடைய வேண்டிய விவசாயிகள் இந்த தொடர் மழையால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். காலியாக உள்ள விவசாய நிலங்களில் கார்த்திகை 1-

ம் தேதி முதல் 15-ம் தேதி வரை கார்த்திகைப் பட்டத்தில் நெல் மற்றும் வேர்க்கடலை விதைகளை விதைக்க விவசாயிகள் தயாராக இருந்தனர்.

÷கடந்த 10 நாள்களாக தொடர்ச்சியாக மழை விட்டு விட்டு பெய்ததால் நெல் நாற்று விடுவதும், வேர்க்கடலை விதை விதைப்பதும் தடைபட்டு வந்தது.

÷இதையடுத்து சென்ற வாரம் வெயில் அடித்ததால் விவசாயிகள் ஆர்வமுடன் வேர்க்கடலை விதைகளை விதைத்தனர்.

÷இந்நிலையில், திருத்தணி, பள்ளிப்பட்டு, ஆர்.கே.பேட்டை, அத்திமஞ்சேரிப்பேட்டை, அம்மையார்குப்பம், கே.ஜி. கண்டிகை ஆகிய பகுதிகளில் பரவலாக மழை பெய்தது.

÷இதனால் வேர்க்கடலை விதைத்த நிலங்களில் மழைநீர் குளம் போல் தேங்கியது. விதைகள் முளைக்காமல் மழைநீரில் அடித்து செல்லப்பட்டதால், மேற்கண்ட பகுதிகளில் பயிரிட்டுள்ள விவசாயிகள் வேதனையில் உள்ளனர்.

÷இது குறித்து வேர்க்கடலை பயிரிட்டுள்ள விவசாயி ராதாகிருஷ்ணன் கூறும்போது: "தற்போது பருவமழை பெய்து வருதால் நாங்கள் வேர்க்கடலை பயிரிட முடிவு செய்தோம். ஆனால் மழை அவ்வப்போது திடீரென பெய்ததால் வேர்க்கடலை விதைகளை நிலத்தில் போட்டால் செடி முளைக்காமல் போய்விடும் என பயந்து சில தினங்களை தள்ளினோம். ÷ஆனால் சென்ற மாதம் 20-ம் தேதிக்கு பிறகு கடுமையான வெயில் காய்ந்தது. வேர்க்கடலை விதைகளை இப்போது நிலத்தில் போட்டால் செடி முளைக்க தொடங்கும் என தீர்மானித்து கடந்த வாரம் நிலத்தில் போட்டோம்.

÷ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவு முதல் திருத்தணி மற்றும் அதை சுற்றியுள்ள ஊர்களில் கனமழை பெய்ய தொடங்கியது.

÷இதனால் நிலத்தில் தண்ணீர் தேங்கி நின்றதால் வேர்க்கடலை செடி சில இடங்களில் முளைக்காமல் போனது.

÷ஒரு சில இடங்களில் ஆங்காங்கே முளைத்துள்ளன. ஆக மொத்தத்தில் கனமழைக்கு முன்பு வேர்க்கடலை பயிரிட்ட விவசாயிகள் 90 சதவீதம் பேர் நிலத்தில் செடி முளைக்காமல் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர்' என்றார் அவர்.

**கொடைக்கானலில் விவசாயப் பயிர்கள் பாதிப்பு**

First Published : 09 Dec 2010 12:53:09 PM IST

கொடைக்கானல், டிச. 8: கொடைக்கானலில் பெய்த தொடர் மழை காரணமாக, விவசாயப் பயிர்கள் முற்றிலும் சேதமடைந்துவிட்டதை அடுத்து, நிவாரண உதவி வழங்க வேண்டுமென, கொடைக்கானல் தாலுகா விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கொடைக்கானல் பள்ளங்கி, கோம்பை, வில்பட்டி, மாட்டுப்பட்டி, அட்டுவம்பட்டி, வாழைக்காட்டு ஓடை, செண்பகனூர் மற்றும் மேல்மலைக் கிராமங்களில் பல ஏக்கரில் கேரட்,

உருளை, பீன்ஸ், முட்டைகோஸ், பீட்ரூட், நூக்கல் போன்ற காய்கறி வகைகள் பயிரிடப்பட்டிருந்தன.

கடந்த ஒரு மாதமாக கொடைக்கானலில் பெய்துவரும் தொடர் மழையால், பயிர்களில் தண்ணீர் தேங்கி செடிகள் அழுகிப் போயுள்ளன. மேலும், செடிகளில் நோய் தாக்கியும், கருகி போகக் கூடிய சூழ்நிலையும் உருவாகியுள்ளன. எனவே, விவசாயிகள் பயிர்களைப் பாதுகாக்க முடியாமல் தவித்து வருகின்றனர்.

இது தவிர, மழைக் காலம் என்பதால், காட்டெருமைகளும் விவசாயப் பகுதிக்களுக்குள் நுழைந்து பயிர்களை நாசம் செய்து வருகின்றன.

எனவே, கொடைக்கானல் தாலுகாவில் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளின் நிலங்களை அதிகாரிகள் பார்வையிட்டு, அரசு உதவி கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென விவசாயிகள் வலியுறுத்தியுள்ளனர்.

தினமலர்

**ஆணைக்குன்னம் ஏரி உடைப்பு: 70 ஏக்கர் நெற்பயிர் நாசம்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 10,2010,00:46 IST

மதுராந்தகம் : அச்சிறுப்பாக்கம் அருகே, ஆனைக்குன்னம் ஏரி உடைந்ததால் 70 ஏக்கர் விவசாய நிலம் பாதிக்கப்பட்டது.

அச்சிறுப்பாக்கம் ஒன்றியத்திற்குட்பட்டது ஆனைக்குன்னம் கிராமம். இங்கு ஊராட்சி ஒன்றிய நிர்வாகம் கட்டுப்பாட்டில் சித்தேரி உள்ளது. ஏரி நீரைப் பயன்படுத்தி 300 ஏக்கரில் விவசாயம் நடைபெறுகிறது. கடந்த சில தினங்களாக கனமழை பெய்ததால் ஏரி நிரம்பியது. மதகு பகுதியில் ஒட்டை ஏற்பட்டதால் நீர் வெளியேறியது.

நேற்று முன்தினம் பகல் 12.30 மணிக்கு திடீரென மதகு பகுதியில் கரை உடைந்தது. அதன் வழியே வெளியேறிய தண்ணீர் வயல்வெளியில் புகுந்ததால், 70 ஏக்கர் நெற்பயிர்கள் நீரில் மூழ்கின. தகவல் அறிந்து ஆர்.டி.ஓ., அண்ணாதுரை, தாசில்தார் ஆனந்தசக்கரவர்த்தி மற்றும் வருவாய் துறை ஊழியர்கள் விரைந்து சென்று, கிராம மக்கள் உதவியுடன் ஏரி உடைப்பை சரி செய்தனர்.

**காய்கறி விலை "கிடுகிடு' உயர்வு எதிரொலி "பை' நிறைய வாங்கிச் சென்ற காலம் மாறியது**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 10,2010,03:46 IST

விழுப்புரம் : விழுப்புரம் மாவட்டத்தில் காய்கறிகள் விலை கிடுகிடுவென உயர்ந்துள்ளதால் பொது மக்கள் அவதியடைந்துள்ளனர். இதுவரை பை நிறைய காய்கறிகள் வாங்கிச் சென்ற வழக்கம் மாறியது. தமிழகத்தில் பல்வேறு பகுதிகளிலும் கடந்த 10நாட்களாக பெய்த தொடர் மழை பொதுமக்கள் மற்றும் விவசாயிகளை பெரும் பாதிப்புக்கு உள்ளாக்கியது. இத்துடன் பொதுமக்கள் அன்றாடம் பயன்படுத்தும் காய்கறிகள் விலையும் கிடுகிடுவெனஉயர்ந்துள்ளது.
விழுப்புரம் மாவட்டத்தில் சங்கராபுரம், திருக்கோவிலூர், செஞ்சி, அவலூர் பேட்டை, கள்ளக்குறிச்சி, உளுந்தூர்பேட்டை உள்ளிட்டபகுதிகளில் காய்கறிகள் விலை பல மடங்கு உயர்ந்துள்ளது.கடந்த மாதம் கிலோ 10 ரூபாய்க்கு விற்ற தக்காளிதற்போது கிலோ 20க்கும், கிலோ 12 ரூபாய் விற்ற வெண்டைக்காய் 32க்கும், 20க்கு விற்ற முருங்கைக்காய் 40 ரூபாய்க்கும் விற்கப்படுகிறது. குறிப்பாக அவரை, நாட்டு கத்தரிக்காய், பீன்ஸ்மற்றும் கேரட் கிலோ 60ரூபாய், கருனை கிழங்கு, இஞ்சி ஆகியவை 40க்கும், மாங்காய் 32, புடலங்காய்28, பீட்ரூட், நூக்கல், பச்சை மிளகாய், உருளை கிழங்கு மற்றும் முட்டைகோஸ் ஆகியவை 20 ரூபாய்க்கும் விற்கப்படுகிறது. கடந்த வாரம் 20 ரூபாய்க்கு விற்ற சாம்பார் வெங்காயம் 48க்கும், 15 ரூபாய்க்கு விற்ற பெல்லாரி வெங்காயம் 40க்கும் விற்கப்படுகிறது. மழைகாரணமாக வெளி மார்க்கெட் டிலிருந்து வரத்துகுறைந்ததால் விலைஉயர்வு ஏற்பட்டுள்ளதாகவியாபாரிகள் தெரிவித்தனர்.

**வாடகைக்கு வேளாண் இயந்திரம் துணை இயக்குனர் தகவல்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 10,2010,03:26 IST

நாமக்கல்: "நாமகிரிப்பேட்டை ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் பல பயிர் அறுவடை இயந்திரம், மக்காச்சோளம் பிரித்தெடுக்கும் கருவி ஆகியவை வாடகைக்கு விடப்படுகிறது' என, வேளாண் துணை இயக்குனர் சவுந்திரராஜன் தெரிவித்துள்ளார்.இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கை:நாமகிரிப்பேட்டை ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தில் விவசாயிகள் வேளாண் கருவிகளை வாடகைக்கு பெற்று, பயன்பெறும் வகையில் வேளாண் இயந்திரங்கள் கொள்முதல் செய்து இருப்பு வைக்கப்பட்டுள்ளது. அதன்படி ஒரு பல பயிர் அறுவடை இயந்திரம், இரண்டு மக்காச்சோளம் பிரித்தெடுக்கும் கருவி உள்ளது.அவற்றுக்கான வாடகை தமிழ்நாடு வேளாண் பல்கலை வேளாண் இயந்திரப் பிரிவு மற்றும் சென்னை வேளாண் விற்பனை கமிஷனரால் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதன்படி பல பயிர் அறுவடை இயந்திரம் ஒரு மணி நேரத்துக்கு 142 ரூபாய், மக்காச்சோளம் பிரித்தெடுக்கும் கருவி ஒரு மணி நேரத்துக்கு 96 ரூபாய் என்ற விகிதத்திலும் முன்னுரிமை அடிப்படையில்

வாடகைக்கு விடப்பட உள்ளது.இந்த இயந்திரம் தேவைப்படும் விவசாயிகள் நாமகிரிப்பேட்டை ஒழுங்குமுறை விற்பனைக்கூட கண்காணிப்பாளரை தொடர்பு கொண்டு, வாடகைக்கு பெற்று பயன்படுத்திக் கொள்ளலாம்.

**டீ சர்வ் மையத்தில் ஏலம் உயர்ந்தது தூள் விலை**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 10,2010,02:17 IST

குன்னூர்: குன்னூர் டீ சர்வ் ஏல மையத்தில் நடந்த ஏலத்தில், அனைத்து ரக தேயிலைத் தூளின் விலையும் உயர்ந்தது.குன்னூர் இன்ட்கோ சர்வ் அலுவலகத்தில் செயல்படும் டீ சர்வ் ஏல மையத்தில், விற்பனை எண் 49க்கான ஏலம் நடந்தது; ரூ.4 லட்சத்து 29 ஆயிரத்து 582 கிலோ தேயிலைத் தூள் விற்பனைக்கு இருந்தது; இலை ரகம் ரூ.2 லட்சத்து 57 ஆயிரத்து 898 கிலோ, டஸ்ட் ரகம்ரூ. 1 லட்சத்து 71 ஆயிரத்து 684 கிலோ அடங்கும். உள்நாடு, ஏற்றுமதி வர்த்தகர்களின் பங்களிப்பு களைகட்டியதால், அனைத்து ரக தூளின் விலையும் கிலோவுக்கு 5-6 ரூபாய் அதிகரித்தது.விலை நிலவரத்தை பொறுத்தவரை, இலை ரகத்தில், சாதாரண ரகத்துக்கு 50-55 ரூபாய், சிறந்த ரகத்துக்கு 70-75 ரூபாய் இருந்தது; டஸ்ட் ரகத்தில், சாதாரண ரகத்துக்கு 55-60, சிறந்த ரகத்துக்கு 75-77 ரூபாயாக இருந்தது. விற்பனை எண் 50க்கான ஏலம், வரும் 15ம் தேதி நடக்கிறது;ரூ.அஅஅ 4 லட்சத்து 18 ஆயிரத்து 131 கிலோ தேயிலைத் தூள் விற்பனைக்கு தயாராக உள்ளது.

**பருத்திக்கு கிடைத்தது கூடுதல் விலை**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 10,2010,02:34 IST

அன்னூர்: அன்னூரில் விற்பனைக்கூடத்தில் நேற்று நடந்த ஏல விற்பனையில் பருத்திக்கு அதிக விலை கிடைத்ததால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்தனர்.அன்னூர் ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் மாதம் துவங்கி அடுத்த ஆண்டு மார்ச் வரை பருத்தி மற்றும் மக்காச்சோள வாராந்திர ஏல விற்பனை நடக்கும். இந்த ஆண்டு வாராந்திர பருத்தி ஏல விற்பனை நேற்று துவங்கியது. ஏலத்தில் 33 விவசாயிகளும், ஐந்து வியாபாரிகளும் பங்கேற்றனர். போல்கார்டு ரக பருத்தி ஒரு குவிண்டால் குறைந்தது 3,900 முதல் அதிகபட்சம் 4,200 ரூபாய் வரை விலை போனது. கொட்டுப்பருத்தி 1,000 ரூபாய் முதல் 1,300 ரூபாய் வரை ஏலம் போனது.விற்பனைக்கூட கண்காணிப்பாளர் ரமேஷ் குமார் கூறுகையில்,"பருத்திக்கு கடந்த ஆண்டு கிடைத்த விலையை விட ஒரு குவிண்டாலுக்கு ஆயிரம் ரூபாய் வரை விலை கூடுதலாக கிடைத்துள்ளது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## நெல்லை மாவட்டத்தில் 5 அணைகள் நிரம்பின... விவசாய பணிகளில் விவசாயிகள் உற்சாகம்

பதிவு செய்த நாள் : டிசம்பர் 10,2010,02:54 IST

திருநெல்வேலி : நெல்லை மாவட்டத்தில் 5 அணைகள் நிரம்பிய நிலையில் விவசாயிகள் உற்சாகமடைந்துள்ளனர்.

நெல்லை மாவட்டப் பகுதிகளில் கடந்த சில நாட்களாக தொடர்ந்து மழை பெய்து வருகிறது. அணைகளின் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் தொடர் மழையினால் நீர்வரத்து அதிகமாகி நீர்மட்டமும் உயர்ந்துள்ளது. மாவட்டத்தில் நேற்று காலை நிலவரப்படி பாபநாசம் அணையில் நீர்மட்டம் நேற்று 129.25 அடியாக உயர்ந்தது. அணைக்கு வினாடிக்கு 2,469 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. மணிமுத்தாறு அணையில் நேற்று முன்தினம் 95.10 அடியாக இருந்த நீர்மட்டம் நேற்று 97.10 அடியாக உயர்ந்தது. தொடர்ந்து "செஞ்சுரியை' எட்டக்கூடிய நிலையில் காணப்பட்டது. அணைக்கு வினாடிக்கு 1,942 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. சேர்வலாறு அணையில் 144.03 அடி, கடனா நதி 85, ராமநதி 83.25, கருப்பாநதி 66.43, குண்டாறு 36.10, அடவிநயினார் 68.50, நம்பியாறு 22.96, கொடுமுடியாறு 50, வடக்கு பச்சையாறு 41.75 அடி நீர்மட்டம் காணப்படுகிறது. கொடுமுடியாறு அணைக்கு வரும் 500 கன அடி தண்ணீர் அப்படியே வள்ளியூரான் கால்வாய், படலையாறு கால்வாய், நம்பியாறு கால்வாய்களில் தண்ணீர் திறக்கப்பட்டு வெளியேற்றப்படுகிறது. இதனால் இக்கால்வாய் கரையோர பகுதி மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு செல்ல அறிவுறுத்தப்பட்டுள்ளனர். கடனா நதி, ராமநதி, நம்பியாறு கொடுமுடியாறு அணைகளும் நிரம்பியுள்ளன. ஏற்கனவே குண்டாறு அணை நிரம்பியதால் மாவட்டத்தில் 11 அணைகளில் 5 அணைகள் நிரம்பிவிட்டன.

மாவட்டத்தில் நேற்று பல்வேறு இடங்களில் மழை ஓய்வு எடுத்தது. ஒரு சில இடங்களில் மட்டும் சாரல் மழை பெய்தது. நேற்று மாலைக்கு பிறகு இதமான சீதோஷ்ண நிலை நிலவியது. தொடர்ந்து இரவில் பல்வேறு பகுதிகளில் பரவலாக மழை பெய்தது.

மழை அளவை பொறுத்தவரை அணைப் பகுதிகளில் பாபநாசம் மேலணையில் 22, கீழணையில் 4, மணிமுத்தாறில் 23.8, சேர்வலாறில் 23, கடனா நதியில் 13.6, ராமநதியில் 4, கருப்பாநதியில் 32, குண்டாறில் 36, நம்பியாறு 14, கொடுமுடியாறு 5, வடக்கு பச்சையாறு 28.2, அடவிநயினார் 35 மி.மீ அளவுகளில் மழை பெய்துள்ளது.

மாவட்டத்தில் மற்ற பகுதிகளை பொறுத்தவரை அம்பையில் 23.2, ராதாபுரத்தில் 38, நான்குநேரியில் 25, ஆலங்குளத்தில் 20.2, ஆய்குடியில் 12.6, சேரன்மகாதேவியில் 14, தென்காசி 40.2, செங்கோட்டை 47, நெல்லை 18.4, பாளை 15.1, சிவகிரி 11, சங்கரன்கோவில் 18 மி.மீ அளவுகளில் மழை பதிவாகியுள்ளது.

மாவட்டத்தில் தொடர் மழையினால் மணிமுத்தாறு அணை வெகு வேகமாக நிரம்பி வரும் நிலையில் அணை நேற்று முதல் திறக்கப்பட்டது. தொடர்ந்து மழை தொடரும் நிலையில் இந்த

அணை விரைவில் நிரம்பும் நிலை ஏற்பட்டுள்ளது. மாவட்டத்தில் தற்போது 5 அணைகளும் நிரம்பிய நிலையில் விவசாயிகள் உற்சாகமடைந்துள்ளனர். இதனால் வரும் நாட்களில் இப்பணிகள் தீவிரமடையும் நிலை ஏற்பட்டுள்ளது.

**அனைவரும் விரும்பும் ""ஆழியாறு"**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 10,2010,00:00 IST



**கோவை:** இந்த ஆண்டு தென்மேற்கு பருவமழை சிறப்பாக இருந்ததால், மேற்கு தொடர்ச்சி மழை பகுதிகள் அதிகமான மழைப் பொழிவை பெற்றன. அடுத்து துவங்கிய, வடகிழக்கு பருவமழை காரணமாகவும் இங்கு மழை கிடைத்து வருகிறது. இதனால், மேற்கு தொடர்ச்சி மலையில் உள்ள நீர்நிலைகள் நிரம்பி வழிந்து வருகின்றன. ஆழியாறு அணை, ஆழியாறு, ஆதாளியம்மன் கோவில் ஆகிய பகுதிகளுக்கு விடுமுறை நாட்களில் ஏராளமான பயணிகள் சுற்றுலா வருகின்றனர். மேற்கு தொடர்ச்சி மலையில் ஆழியாறு பகுதியில் தொடர்ச்சியாக மழை பெய்து வருவதால், மழைநீர் அருவியாக கொட்டி வருகிறது. அணை மற்றும் நீர் பிடிப்பு பகுதியில் இதனால் நீர் மட்டம் உயர்ந்துள்ளது. காற்றும் குளுமையாக வீசுகிறது. இந்த சூழ்நிலையில், ஆழியாறு காண வரும் சுற்றுலா பயணிகள், அங்குள்ள மங்கிபால்ஸ்சுக்கு சென்று ஆனந்தமாக குளித்து மகிழ்கின்றனர். மேற்கு தொடர்ச்சி மலையின் ஒரு பகுதியில் அமைந்துள்ள திருமூர்த்தி அருவியிலும் நீர் கொட்டுகிறது. அங்கு வரும் சுற்றுலா பயணிகள் அருவியில் ஆனந்தமாக குளித்து, மலை முகடுகளில் மேகம் தவழும் இயற்கை காட்சியினை ரசித்து செல்கின்றனர்.

**நாட்டுக் கோழி"க்கு நல்ல வரவேற்பு**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 10,2010,00:00 IST



சேலம்: கிராமப்புறங்களில் பிராய்லர் கோழிகளை விட, நாட்டு கோழிகளை அசைவ பிரியர்கள் விரும்பி வாங்குவது சமீபகாலமாக அதிகரித்து வருகிறது. இதனால் கிராமங்களில் நாட்டுக் கோழி வளர்ப்பு பண்ணைகள் பெருகி வருகின்றன. மேட்டூர் தாலுகா, நங்கவள்ளி அடுத்த பூசாரிதாசன் வளைவு பகுதியில், இயற்கை சூழலில் பண்ணை அமைத்து 3,000 நாட்டுக் கோழிகள் வளர்க்கப்படுகின்றன. "நான்கு ஏக்கர் பரப்பில், மரங்கள் சூழ்ந்த இயற்கை சூழலில் நாட்டுக் கோழிகளை வளர்க்கிறோம். இரவில் கோழிகளை அடைக்க பண்ணையும் தனியாக அமைத்துள்ளோம். காலையில் கோழிகளை திறந்து விட்டால், நான்கு ஏக்கர் பரப்பில் சுதந்திரமாக சுற்றி, இரை தேடும். இவற்றிற்கு தீவனமாக பச்சைக் கீரை, காய்கள் வழங்குகிறோம். குஞ்சுகளை மொடக்குறிச்சியில் இருந்து மொத்தமாக வாங்கி வந்து 90 நாட்கள் வரை வளர்த்து வியாபாரிகளுக்கு விற்கிறோம். கோழி ஒரு கிலோ 130 ரூபாய்' என்கிறார் கோழிப்பண்ணை வைத்துள்ள மயில்சாமி.

**ஆடுகளின் சாய்ஸ் ""கொழுக்கட்டை புல்"**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 10,2010,00:00 IST



திருப்பூர்: கால்நடை தீவன பற்றாக்குறை ஏற்பட்டுள்ள இக்கால கட்டத்தில், ஊட்டச்சத்து மிக்க புல் வகைகளை வளர்க்கும் முயற்சியில், திருப்பூர் கால்நடை மருத்துவமனை நிர்வாகம் இறங்கியுள்ளது. கொழுக்கட்டைப் புல் உள்ளிட்ட ஊட்டச்சத்துமிக்க புல் வகைகளை வளர்ப்பதன் மூலம் விவசாயிகள் தங்களின் கால்நடைகளுக்கு தேவையான தீவனங்களை உற்பத்தி செய்ய முடியும். சுண்ணாம்புச் சத்து மிகுந்த நிலங்களில் கொழுக்கட்டைப் புல் நன்றாக வளரும். இந்த புல் வகை, கால்நடைகளுக்கு குறிப்பாக ஆடுகளுக்கு மிகச்சிறந்த தீவனமாகும். பசுந்தீவன பயிரான இது, வறட்சியையும், வெப்பத்தையும் தாங்கி வளரும் திறன் கொண்டது. ஒரு எக்டருக்கு, ஆண்டுக்கு 40 டன் புற்கள் விளையும். ஒருமுறை பயிரிட்டால், அடுத்த 10 முதல் 20 ஆண்டுகளுக்கு இந்த புற்கள் வளர்ந்து, பயன் அளிக்கும் என்பது சிறப்பம்சம். விவசாயிகள், தங்களின் விளைநிலங்களில் ஒரு பகுதியில் கொழுக்கட்டை, கோரைப் புற்களை வளர்ப்பதன் மூலம் தீவன பற்றாக்குறையை சமாளிக்கலாம்.

**பிசான சாகுபடிக்காக மணிமுத்தாறு அணை திறப்பு**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 10,2010,02:55 IST

அம்பாசமுத்திரம் : மணிமுத்தாறு அணையிலிருந்து பிசான சாகுபடிக்காக நெல்லை, தூத்துக்குடி மாவட்டங்களில் 10 ஆயிரத்து 834 ஏக்கர் விளை நிலங்கள் பயனடையும் வகையில் மணிமுத்தாறு பிரதான கால்வாயில் நேற்று தண்ணீர் திறந்து விடப்பட்டது.

மணிமுத்தாறு பிரதான கால்வாய் நீரொழுக்கு விதிமுறைகளின் படி இக்கால்வாயில் உள்ள நான்கு ரீச்களுக்கும் ஆண்டுதோறும் சுழற்சி முறையில் தண்ணீர் திறந்து விடப்பட்டு வருகிறது.

நடப்பாண்டில் 1வது மற்றும் 2வது ரீச் குளங்களுக்கு முன்னுரிமை அளித்து மணிமுத்தாறு அணையில் இருந்து பிரதான கால்வாயில் நேற்று தண்ணீர் திறந்து விடப்பட்டது.

சிறப்பு பூஜையினையடுத்து, அணையின் தலை மதகிலிருந்து வினாடிக்கு 100 கன அடி தண்ணீர் திறந்து விடப்பட்டது. இதன் மூலம் அம்பாசமுத்திரம், பாளையங்கோட்டை, நான்குநேரி, ஸ்ரீவைகுண்டம் தாலுகா பகுதிகளிலுள்ள 171 குளங்களுக்குட்பட்ட 10 ஆயிரத்து 834 ஏக்கர் விளை நிலங்கள் பாசன வசதியை பெறுகின்றன.

தண்ணீர் திறப்பில், கலெக்டர் ஜெயராமன், சேரன்மகாதேவி சப்-கலெக்டர் வீரராகவராவ், சேரன்மகாதேவி எம்.எல்.ஏ., வேல்துரை, சாத்தான்குளம் எம்.எல்.ஏ., ராணிவெங்கடேஷன், தாமிரபரணி வடிநில கோட்ட செயற்பொறியாளர் காமராஜ், உதவி செயற் பொறியாளர்கள் முத்துபாண்டியன், கங்காதரன், தாசில்தார் சுப்பிரமணியன், தாமிரபரணி திட்டக்குழு தலைவர் உதயசூரியன், நெல்லை பார்லிமென்ட் இளைஞர் காங்கிரஸ் தலைவர் துரை, சேரன்மகாதேவி பஞ். யூனியன் தலைவர் பானுமதி, கல்லிடைக்குறிச்சி டவுன் பஞ். தலைவர் இசக்கிபாண்டியன், துணை தலைவர் சுப்பிரமணியன், 2வது ரீச் நீரினை பயன்படுத்துவோர் சங்க தலைவர் முருகன், மணிமுத்தாறு டவுன் பஞ். நிர்வாக அதிகாரி ராஜேந்திரன், பாசன கண்காணிப்பாளர் மாரியப்பன் உட்பட விவசாயிகள் பலர் கலந்து கொண்டனர்.

சாகுபடி இலக்கு 92 ஆயிரம் ஹெக்டர்; கலெக்டர் : தண்ணீர் திறப்பிற்கு பின் கலெக்டர் ஜெயராமன் கூறியதாவது: அரசு ஆணையின்படி பிசான சாகுபடிக்காக நெல்லை, தூத்துக்குடி மாவட்டத்தில் 1வது, 2வது ரீச்களிலுள்ள 171 குளம் மூலம் 10 ஆயிரத்து 834 ஏக்கர் விளை நிலங்கள் பயனடையும் வகையில் அணையிலிருந்து தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. தற்போது வினாடிக்கு 100 கன அடி தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. தேவைக்கு ஏற்ப இந்த அளவு அதிகரிக்கப்படும். இன்று (நேற்று) முதல் அடுத்தாண்டு மார்ச் 31 வரை தொடர்ந்து 113 நாட்கள் தண்ணீர் வழங்கப்படும்.

அணையில் 97 அடி தண்ணீர் உள்ளது. மழையின் மூலம் அணையின் நீர்மட்டம் முழு கொள்ளளவை எட்டும் போது மற்ற பகுதிகளுக்கும் தண்ணீர் வழங்கப்படும். மாவட்டத்தில் 515 மி.மீ., மழை பெய்துள்ளது. மழையில், சராசரி ஆண்டு. தாமிரபரணி, சிற்றாறு மூலம் 90 சதவீத குளங்கள் நிரம்பியுள்ளன. மானாவாரி குளங்கள் நிரம்ப வேண்டியதுள்ளது. மாவட்டத்தில் 92 ஆயிரம் ஹெக்டர் நெல் சாகுபடி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இது வரை 50 ஆயிரம் ஹெக்டரில் நடவு நடந்துள்ளது. இவ்வாறு கலெக்டர் ஜெயராமன் கூறினார்.

**தீங்கு ஏற்படுத்தும் பார்த்தீனியம் செடிகள் :முழுமையாக அழிக்க அழைப்பு**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 10,2010,02:09 IST

கூடலூர்:""மனிதர்களுக்கு தீங்கு ஏற்படுத்தும் பார்த்தீனியம் செடிகளை முழுமையாக அழிக்க, மாணவர்கள் முன்வர வேண்டும்," என, அழைப்பு விடப்பட்டுள்ளது. கூடலூர் வனத்துறை சார்பில், கூடலூர் குங்கூர்மூலா அரசு மேல்நிலைப் பள்ளி மாணவ, மாணவியருக்கு, இயற்கை பாதுகாப்பு விழிப்புணர்வு முகாம், நாடுகாணி ஜீன்பூல் தாவரவியல் மையத்தில் நேற்று நடந்தது. வனக் காப்பாளர் சத்யபால் வரவேற்றார்.வனச்சரகர் நாகலிங்கம் பேசுகையில், ""இயற்கையை பாதுகாப்பதில், மாணவ, மாணவியருக்கு அதிக பங்குள்ளது. எதிர்கால நலன் கருதி, பள்ளி, வீடுகளில் மரக்கன்றுகளை நடவு செய்து வளர்க்க வேண்டும். பார்த்தீனியம் என்ற விஷச் செடி மூலம் சுவாசம் தொடர்பான நோய் ஏற்படும் அபாயம் உள்ளது. கூடலூர் பகுதிகளில் பரவி வரும் இச்செடிகளை அழிக்க, மாணவ, மாணவியர் முன்வர வேண்டும். யானைகள், தினமும் 40 கி.மீ., நடந்துச் சென்று, 200 கிலோவுக்கு மேல் உணவு சாப்பிடும் தன்மையுடையது. பல வகையான தாவரங்களுடன், வனங்கள் படர்ந்திருந்தால் தான், அவைகளுக்கு தடையின்றி உணவு கிடைக்கும். வனம் மற்றும் அதைச் சார்ந்த வன விலங்குகளை காப்பாற்ற, மாணவர்கள் முன்வர வேண்டும்," என்றார்."மாணவர்களும் இயற்கையும்' என்ற தலைப்பில், ஐலேண்ட் அறக்கட்டளை ஒருங்கிணைப்பாளர் கலாநிதி, "ஜீன்பூல் தாவரவியல் முக்கியத்துவம்' குறித்து, தாவரவியல் ஆராய்ச்சியாளர் கோமதி, "உலர் தாவரங்கள்' முக்கியத்துவம் குறித்து, ஜீன்பூல் உலர் தாவர கள உதவியாளர் சுந்தர் விளக்கினர். ஜீன்பூல் தாவரவியல் மைய வனவர் காந்தன், ஸ்ரீமதுரை அரசு மேல்நிலைப் பள்ளி ஆசிரியர்கள் சந்திரபோஸ், மங்கையர்கரசி, சீலா, ஐலேண்ட் அறக்கட்டளை ஊழியர் அருள்தாஸ் மற்றும் மாணவ, மாணவியர் பங்கேற்றனர்.

**மலைக்காய்கறி விவசாயம் அடியோடு பாதிப்பு**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 09,2010,23:25 IST

தாண்டிக்குடி: தாண்டிக்குடி மலையில் மழை பெய்ததால் விவசாயப்பணி, இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

கொடைக்கானல், கீழ் மலைப்பகுதியில் மழை காரணமாக ஆறுகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. விவசாய நிலங்களில் ஊற்றுக்கள் ஏற்பட்டு காய்கறி 30 ஆயிரம் ஏக்கரில் பயிரிடப்பட்ட காபி, மிளகு, ஆரஞ்சு, வாழை விவசாயம் பாதித்தது. காபி பழங்கள் பறிக்க இயலாமல் பழங்கள் வெடித்து நிலத்தில் உதிர்ந்துள்ளன. உதிர்ந்த பழங்கள், செடிகளில்

உள்ளவற்றை பறிக்க வழக்கமான சம்பளமான ரூ.90 ஐ விட ரூ.20 முதல் 30 கூடுதலாக கொடுத்து பறிக்கும் நிலை உருவாகியுள்ளது.

விவசாயிகள் கூறுகையில்: கடந்த 20 ஆண்டுகளுக்கு முன்னர் தான் இது போன்ற மழை பெய்தது. வழக்கத்திற்கு மாறாக தோட்டங்களில் ஊற்றுக்கள் ஏற்பட்டதால் விவசாயப்பணிகள் முடங்கி பயிர் விளைச்சல் பாதித்துள்ளது.

**ஆத்தூர்:** ஆத்தூர் தாலுகாவில் 36 ஏக்கரில் பயிர்கள் சேதமடைந்தன. 25 ஏக்கர் நெல், 10 ஏக்கர் கம்பு, ஒரு ஏக்கர் சோளம் பாதிக்கப்பட்டுள்ளது. மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியில் இருந்து மழைநீர் வரக்கூடிய வரத்து வாய்க்கால்கள் முறையாக பராமரிக்கப்படாததால், குளங்கள், கண்மாய்களுக்கு செல்லும் வழியில் உடைப்பு ஏற்பட்டு வயல் வெளிகளில் பாய்ந்ததால் சேதம் ஏற்பட்டது. கன்னிமார் ஓடை பகுதியில் இருந்து சிமெண்ட் வாய்க்கால் அமைக்கப்படும் என சட்டசபையில் அறிவிக்கப்பட்ட திட்டத் தை செயலாக்குவதுதான் இனி வரும் காலங்களில் இவ்வாறு நிகழாமல் தடுப்பதற்கான தீர்வாகும் என விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

**மக்கா சோளம் பாதிப்பு:** வேடசந்தூர் தாலுகாவில் மழையால் ஓரளவு கிணறுகளுக்கு நீர் வரத்து கிடைத்துள்ளது. பெரும்பாலான குளங்கள் நிரம்பவில்லை. தொடர்ச்சியாக பெய்த மழையால், விவசாய நிலங்களில் மழை நீர் தேங் கி கண்வலி செடி, மக்காச்சோளம், நிலக்கடலை உள்ளிட்ட பயிர்கள் பரவலாக சேதமடைந்துள்ளன. ஆர்.கோம்பை ஊராட்சி புங்கம்பாடி, தங்காம்பட்டி பகுதியில், கண்வலிசெடி விவசாயம் செய்த 65 விவசாயிகள், கண்வலி செடி பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தனர்.

**ஒட்டன்சத்திரத்தில்சேதமில்லை:** தொடர் மழை காரணமாக ஒட்டன்சத்திரம் பகுதியில், 25 குடிசை வீடுகள் சேதமடைந்தன. இவற்றுக்கு தலா ரூ.2 ஆயிரத்து 500 இழப்பீடு வழங்கப்பட்டது. மற்றபடி வெள்ளத்தினால் எந்த சேதமும் இல்லையென தாசில்தார் விஸ்வநாதன் தெரிவித்தார்.

**மழை இழப்பு இல்லை:** வேடசந்தூர் தாலுகாவில் நவம்பரில் 17 நாட்கள் 214 மி.மீ., மழை மட்டுமே பெய்துள்ளது. டிசம்பரில் முதல் தேதி 3 மி.மீ., இரண்டாம் தேதி 15.4 மி.மீ,.மூன்றாம் தேதி 50 மி.மீ., 5ம்தேதி இரண்டு மி.மீ., மழை பெய்துள்ளது. குறைவான மழையால் வேடசந்தூர் பகுதியில் உள்ள குளங்களுக்கு நீர் வரத்து இல்லை.பிற இடங்களில் பெய்த மழையால் அழகாபுரி அணையில் 25. 2 அடி நீர் மட்டுமே தேக்கப்பட்டுள்ளது. விவசாய நிலம் எதுவும் மழையால் வேடசந்தூர் பகுதியில் சேதமடையவில்லை.

**நத்தம்:** நத்தம் தாலுகாவில் பெய்த மழையால்  26 வருவாய் கிராமங்களில் இது வரை 87 குடிசை வீடுகள் பகுதியளவு சேதமடைந்துள்ளது.  நத்தத்தில் போதிய மழையில்லாததால் வயல்களில் சாகுபடி செய்யப்பட்ட நன்செய் பயிர், புன்செய் நிலங்களில் சாகுபடி செய்யப்பட்ட மானாவாரிப்பயிர்கள் எந்த வித சேதமும் அடையவில்லை என நத்தம் தாசில்தார் முனியாண்டி தெரிவித்தார்.

**கனமழையால் வாழையில் குலைநோய் தாக்கி சேதம்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 09,2010,01:40 IST

முள்ளிப்பள்ளம்: சோழவந்தான் பகுதியில் பெய்த மழையில் குலைநோய் தாக்கி வாழைமரங்கள் சேதமடைந்தன.சோழவந்தான், முள்ளிப்பள்ளம், தென்கரை, கருப்பட்டி, பாலகிருஷ்ணாபுரம், இரும்பாடி, ரிஷபம், திருவேடகம், மண்ணாடிமங்கலம் பகுதிகளில் நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலங்களில் நாடு, பச்சை, ஒட்டுநாடு, ரஸ்தாலி ரக வாழைகள் பயிரிடப்பட்டன. இது ஓராண்டு பயிராகும். துவக்கத்தில் பயிரிட  ஒரு ஏக்கருக்கு 60 ஆயிரம் ரூபாய் செலவாகிறது. அதன் பின் பராமரிப்பு செலவு மட்டும்தான். குறைந்த செலவில் அதிக மகசூல் தருவதால் வாழையை மாற்று பயிராக இப்பகுதியினர் பயிரிட்டு வருகின்றனர். வாழைமரங்கள் அறுவடைக்கு தயாராக இருந்தது. சீசன் துவங்கியுள்ள நிலையில் மார்க்கெட்டில் வாழை தார் 150 முதல் 200 ரூபாய் வரை விற்கப்படுகிறது. 150 இலைகள் கொண்ட கட்டு 200 ரூபாய்க்கும், 350 இலைகள் கொண்ட கட்டு ரூபாய் 600 ரூபாய்க்கும் விற்கப்படுகிறது. விற்பனை உயர்வால் இப்பகுதி விவசாயிகள் கூடுதல் லாபம் பெற்றனர். சமீபத்தில் பெய்த கனமழையால் இப்பகுதியில் பயிரிட்ட வாழை மரங்களின் வேர்கள் அழுகி, குலைநோய் தாக்கியது. தாரில் பிஞ்சுக்காய் வளர்ச்சி குன்றி கருகியது. இலைகள் காய்ந்து சருகுகளாக உள்ளன. இதனால் இப்பகுதி விவசாயிகள் பெருத்த நஷ்டம் அடைந்துள்ளனர். விவசாயி மணி கூறுகையில், "மழை தண்ணீர் வாழை தோட்டத்திற்குள் 45 நாட்கள் வடியாமல் நிரம்பி நின்றது. அறுவடை சமயத்தில் நோய் தாக்கியதால், ஒரு ஏக்கருக்கு 3 லட்சம் ரூபாய் நஷ்டம், வாங்கிய கந்து வட்டியை அடைக்க முடியாது அவதிபடுகிறோம். அரசு நிவாரணம் வழங்க வேண்டும்' என்றார்.

**மாவட்டத்தில் 16 660 ஹெக்டேரில் பயறு சாகுபடி செய்ய இலக்கு**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 09,2010,23:20 IST

தேனி: தேனி மாவட்டத்தில் 16, 660 ஹெக்டேர் நிலத்தில் பயறு வகைகளை சாகுபடி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.  பயறு உற்பத்தியை அதிகரிக்கும் வகையில் விவசாயிகளை

அரசு ஊக்கப்படுத்தி வருகிறது. பயறு வகை சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு ஹெக்டேருக்கு நான்காயிரம் ரூபாய் மதிப்புள்ள டி.ஏ.பி., யூரியா, பொட்டாஷ், டி.ஏ.பி., தெளிப்பு உரம், சிங்க் சல்பேட், மாங்கே செப், அசாடிராக்டின், எண்டோசல்பான் போன்றவற்றை வழங்குகிறது.

இதுவரை மாவட்டத்தில் 10,780 ஹெக்டேரில் பயறு வகைகள் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. ஒரு ஹெக்டேருக்கு 625 கிலோ பயறு உற்பத்தி செய்ய அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது. ஆனால் விவசாயிகள் ஹெக்டேருக்கு 750 கிலோ வரை உற்பத்தி செய்து வருகின்றனர். மீதம் உள்ள இலக்கினை நிறைவேற்றும் வகையில் விவசாயத்துறையினர் ஊக்குவிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். மாவட்டத்தில் 277 ஹெக்டேர் பரப்பில் பயறு வகை செயல் விளக்க திடல் அமைக்கப்பட்டுள்ளது.

## ***உணவு பொருள்களுக்கான பணவீக்க விகிதம் 8.69 சதவீதமாக உயர்வு***

*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு*
*புதுடெல்லி*
*உணவு பொருள்களுக்கான பணவீக்க விகிதம், நவம்பர் 27–ந் தேதியுடன் நிறைவடைந்த வாரத்தில் 8.69 சதவீதமாக உயர்ந்துள்ளது. இது, முந்தைய வாரத்தில், கடந்த 18 மாதங்களில் இல்லாத அளவிற்கு 8.60 சதவீதமாக குறைந்து இருந்தது.*
*சென்ற ஓர் ஆண்டில், அரிசி மற்றும் தானியங்கள் விலை முறையே 1.60 சதவீதம் மற்றும் 0.66 சதவீதம் அதிகரித்துள்ளது. முட்டை, இறைச்சி மற்றும் மீன் உள்ளிட்ட உணவு பொருள்கள் விலை 16.16 சதவீதம் உயர்ந்துள்ளது. காய்கறிகளில் வெங்காயம் விலை 25.48 சதவீதம் அதிகரித்துள்ளது. மேலும், பழங்கள் (18.31 சதவீதம்) மற்றும் பால் விலையும் (17.76 சதவீதம்) உயர்ந்துள்ளது.*
*அதேசமயம், கோதுமை மற்றும் பருப்பு வகைகள் விலை முறையே 3 சதவீதம் மற்றும் 10.91 சதவீதம் குறைந்துள்ளது. உருளைக்கிழங்கு விலை 45.40 சதவீதம் குறைந்ததையடுத்து காய்கறி விலை 3.42 சதவீதம் குறைந்துள்ளது.*
*மொத்த விலைக் குறியீட்டு எண் அடிப்படையில் கணக்கிடப்படும் அனைத்து*

பொருள்களுக்கான பணவீக்க விகிதம், சென்ற அக்டோபர் மாதத்தில் 8.58 சதவீதமாக இருந்தது. இந்நிலையில், அடுத்த வாரத்தில் பெட்ரோல், டீசல் விலை லிட்டருக்கு ரூ.2 உயர்த்தப்படும் என தெரிகிறது. இதனால், உணவு பொருள்களை எடுத்துச் செல்வதற்கான செலவினம் அதிகரித்து, பணவீக்கம் மேலும் உயரும் என பொருளாதார நிபுணர் ஒருவர் தெரிவித்தார்.

## பொங்கல் பொருள் இலவசமாக வழங்க அரசு கொள்முதல்: வெல்லம், ஏலக்காய், முந்திரி பருப்பு விலை திடீர் உயர்வு வரத்து அதிகரிப்பால் அரிசி, பருப்பு விலை குறைந்தது

சென்னை, டிச.10–
பொங்கல் பொருட்கள் இலவசமாக வழங்க வெல்லம், ஏலக்காய், முந்திரி பருப்பு போன்றவற்றை அரசு கொள்முதல் செய்துள்ளதால், அதன் விலை திடீரென உயர்ந்துள்ளது. அதே நேரத்தில், வரத்து அதிகரிப்பால் அரிசி, பருப்பு விலை குறைந்துள்ளது.

தமிழக அரசு கொள்முதல்

பொங்கல் பண்டிகையை முன்னிட்டு, ரேஷன் கடைகளில் பொங்கல் பொருட்கள் இலவசமாக வழங்கப்படும் என்று தமிழக அரசு அறிவித்துள்ளது. இதற்காக, 1000 லாரி வெல்லத்தையும், லட்சக்கணக்கான ஏலக்காய் டின்களையும், பச்சரிசி, முந்திரி பருப்புகளை மூட்டைகள் கணக்கிலும் தமிழக அரசு வாங்கியுள்ளது.
இதனால், வெளிச்சந்தையில் தேவை அதிகரித்துள்ளதால், வெல்லம், ஏலக்காய் முந்திரி பருப்பு ஆகியவற்றின் விலை திடீரென உயர்ந்துள்ளது. கடந்த மாதம் ரூ.32–க்கு விற்பனையான ஒரு கிலோ வெல்லம் (சேலம்) ரூ.45 ஆக அதிகரித்துள்ளது. இதேபோல், ரூ.45–க்கு விற்பனையான வேலூர் வெல்லம் ரூ.55 ஆக உயர்ந்துள்ளது.

புளி விலை உயர்வு

ரூ.400–க்கு விற்பனையான ஒரு கிலோ முந்திரி பருப்பு (முதல் ரகம்) ரூ.500 ஆகவும், ரூ.300–க்கு விற்பனையான 2–ம் ரக முந்திரி பருப்பு ரூ.400 ஆகவும் விலை உயர்ந்துள்ளது. இதேபோல், ஆப்பிரிக்காவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் ஏலக்காய் ஒரு கிலோ ரூ.800–க்கு விற்பனை செய்யப்பட்டது. தற்போது, ரூ.1200 ஆக அதிகரித்துள்ளது.
விளைச்சல் குறைவால், புளி விலை கிடுகிடுவென உயர்ந்துள்ளது. கடந்த மாதம் ரூ.90–க்கு விற்பனையான ஒரு கிலோ புளி (முதல் ரகம்), தற்போது ரூ.110 ஆக

அதிகரித்துள்ளது. இதேபோல், ரூ.70–க்கு விற்பனையான 2–ம் ரக புளி, ரூ.90 ஆக உயர்ந்துள்ளது.

பூண்டு விலை

குஜராத் மற்றும் சீனாவில் விளையும் பூண்டு விலையும் அதிகரித்துள்ளது. கடந்த மாதம் ரூ.180–க்கு விற்பனையான ஒரு கிலோ பூண்டு, ரூ.240 ஆகவும், ரூ.230–க்கு விற்பனையான மலை பூண்டு, ரூ.280 ஆகவும் விலை அதிகரித்துள்ளது. சீனாவில் இருந்து அடுத்த 2 மாதங்களில் பூண்டு அதிகமாக இறக்குமதி செய்யப்படும். அதனைத் தொடர்ந்து விலை குறையும் என்று தமிழ்நாடு அனைத்து மளிகை பொருட்கள் வியாபாரிகள் சங்க தலைவர் எஸ்.பி.சொரூபன் கூறினார்.

ஆந்திரா மாநிலத்தில் இருந்து பிற மாநிலங்களுக்கு அரிசி ஏற்றுமதி செய்வதற்கான தடை விலக்கிக்கொள்ளப்பட்டதால், தமிழகத்திற்கு அரிசி வரத்து அதிகரித்துள்ளது. இதே வேளையில் தமிழகத்திலும் இந்த ஆண்டு அரிசி விளைச்சல் அதிகம். இதனால், அரிசி விலை குறைந்து வருகிறது.

அரிசி விலை சரிவு

ரூ.20–க்கு விற்பனையான ஒரு கிலோ பொன்னி அரிசி ரூ.18 ஆகவும், அதிசய பொன்னி ரூ.22–ல் இருந்து ரூ.20 ஆகவும், பாபட்லா பொன்னி ரூ.24–ல் இருந்து ரூ.22 ஆகவும் விலை குறைந்துள்ளது. இதேபோல், இட்லி அரிசி ஒரு கிலோ ரூ.25–ல் இருந்து ரூ.23 ஆக விலை குறைந்துள்ளது.

பச்சரிசி ஒரு கிலோ ரூ.22–க்கு விற்பனையானது, தற்போது ரூ.20 ஆக விலை குறைந்துள்ளது. பொன்னி பச்சரிசி ரூ.32–ல் இருந்து ரூ.30 ஆக விலை குறைந்துள்ளது. மேலும், விலை குறைய வாய்ப்பு உள்ளது.

சர்க்கரை விலை உயர்வு

இந்தியாவில் உள்ள சர்க்கரை ஆலைகளுக்கு கடந்த மாதம் 17 லட்சம் டன் சர்க்கரையை அரசு ஒதுக்கியது. ஆனால், இந்த மாதம் 15 லட்சம் டன்னாக அதை குறைத்துக் கொண்டது. இதனால், சர்க்கரை விலை அதிகரித்துள்ளது. கடந்த மாதம் ரூ.28–க்கு விற்பனையான ஒரு கிலோ சர்க்கரை தற்போது ரூ.33 ஆக அதிகரித்துள்ளது. அதே நேரத்தில், பருப்பு வகைகள் விலை குறைந்துள்ளது. ரூ.68–க்கு விற்பனையான ஒரு கிலோ துவரம் பருப்பு ரூ.58 ஆகவும், தான்சானியா நாட்டு துவரம் பருப்பு ரூ.60–ல் இருந்து ரூ.50 ஆகவும் விலை சரிந்துள்ளது. இதேபோல், அமெரிக்கா, கனடா நாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்படும் டர்கி ரக துவரம் பருப்பு ரூ.44–ல் இருந்து ரூ.34 ஆகவும் விலை குறைந்துள்ளது.

எண்ணெய் விலை

இதேபோல், ரூ.70–க்கு விற்பனையான முதல் ரக உளுந்தம் பருப்பு ரூ.64 ஆகவும், பர்மா உளுந்தம் பருப்பு ரூ.66–ல் இருந்து ரூ.59 ஆகவும் விலை சரிந்துள்ளது. பாசி பருப்பு ரூ.70–ல் இருந்து ரூ.63 ஆக விலை குறைந்துள்ளது.

ஆனால், எண்ணெய் வகைகள் விலை கிடுகிடுவென உயர்ந்துள்ளது. கடந்த மாதம் ரூ.48–க்கு விற்பனையான ஒரு கிலோ பாமாயில் ரூ.59 ஆக அதிகரித்துள்ளது.

இதேபோல், ரூ.67–க்கு விற்பனையான ரீபைண்ட் ஆயில் ரூ.75 ஆகவும், ரூ.100–க்கு விற்பனையான தேங்காய் எண்ணெய் (நயம்) ரூ.120 ஆகவும், ரூ.80–க்கு விற்பனையான 2–ம் ரக தேங்காய் எண்ணெய் ரூ.100 ஆகவும் விலை உயர்ந்துள்ளது.

இதேபோல், ரூ.100–க்கு விற்பனையான அக்மார்க் நல்லெண்ணெய் ரூ.120 ஆகவும், ரூ.60–க்கு விற்பனையான 2–ம் ரக நல்லெண்ணெய் ரூ.75 ஆகவும் விலை அதிகரித்துள்ளது.